# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

## அ.சா. 11 (LW 20 )

| **பெயர்** | அழகுராஜா | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | முத்து | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **19.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தாண்டிக்குடி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2022 அன்று இரவு 11.30 மணி அளவில் அம்மையநாயக்கனுர் காவல் ஆய்வாளர் ராஜ்குமார் என்ற பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார். நானும் உடன் இருந்தேன். 21.06.2022 அன்று ஆய்வாளர் என்னிடம் ராஜ்குமாரின் உடலை உடற்கூராய்வு செய்வதற்காக கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கிற்கு சென்று அங்கிருந்த மருத்துவரிடம் கொடுத்தேன். அந்த கடிதம் ஏற்கனவே அ.த.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அங்கிருந்த மருத்துவருக்கு ராஜ்குமாரின் பிரேதத்தின் அங்க மச்சம் அடையாளங்கள் காட்டினேன். இடது மார்பில் சிங்கம் பச்சை குத்தியிருந்தார். வலது பக்க மார்பில் கருப்பு மச்சம் இருந்தது. அதை நான் பெற்றுக்கொண்டு பின்பு காலை 11.40மணிக்கு உடற்கூராய்வு செய்ய ஆரம்பித்தார். மதியம் 01.40மணி அளவில் முடித்தார்.பின்பு ராஜ்குமாரின் உடலை என்னிடம் கொடுத்தார். நான் அதை பெற்று ராஜ்குமாரின் தந்தை சந்திரனிடம் ஒப்படைத்தேன். இறந்த ராஜ்குமாரின் உடலிலிருந்து 1. சிகப்புபுளு கலர் போட்ட சட்டை ஒன்று. 2 . சிமிண்ட் கலர் பனியன், 3. பூம்புகார் கம்பெனி பாக்கெட் வைத்த ஜட்டி டவுசர் –1, ஆகியவற்றை மருத்துவர் அன்றே என்னிடம் கொடுத்தார். மேற்படி

ஆடைகளை கொண்டு போய் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். 23.06.2022 அன்று உடல் உள்ளுறுப்புக்களை பரிசோதனை செய்ய 3 பாட்டில்களில் போட்டுக் கொடுத்தார். அதன் பின்பு காவல் ஆய்வாளரிடம் வேண்டுகோள் கடிதம் பெற்று நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்து உத்தரவு பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் MDU/TOX,H/1418/2022 நாள்.23.06.2022 ன் படி ஒப்படைத்தேன். அதன் பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை காவல் ஆய்வாளரிடம் வேண்டுகோள் கடிதம் பெற்று நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்து உத்தரவு பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் MDU/BIOL/254/2022 நாள்.21.07.2022 ன் படி ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து அறிக்கை செய்தேன். வழக்கு சொத்துக்களை **பகுப்பாய்வு செய்ய நீதிமன்றத்திற்கு ஆய்வாளர் கொடுத்த வேண்டு கோள் கடிதம் அ.த.சா.ஆ.12. ஆகும். மதுரை வட்டார தடயஅறிவியல் ஆய்வகதிலிருந்து வட்டாரய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.13. ஆகும்.** ஆய்வாளர் என்னை 30.07.2022 அன்று வழக்கு சம்மந்தமாகவும், பிரேத கூராய்வின் போது உடன் இருந்தது சம்மந்தமாகவும், வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தது சம்மந்தமாகவும் என்னை விசாரித்தார்.

**1,2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை தெரிவித்தார்.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.19 19:17:52 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.